சிறந்த பராமரிப்பும், தடுப்பூசி போடுவதும் சிறந்த வழிமுறை பக்கம் 12

கதை பேசிய கடிதங்கள்... பக்கம் 14




லாலாபேட்டை பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள எள் செடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்குகிறது.

குளித்தலை நகரில்

# குற்ற சம்பவங்களை கண்காணிக்க சிசிடிவி கேமரா பொருத்தும் பணி

**காவல்துறை தீவிர ஏற்பாடு**

**குளித்தலை, செப்.9:** குளித்தலை நகரில் குற்ற சம்பவங்களை கண்காணிக்க, போக்குவரத்து காவல் துறை, சட்டம் ஒழுங்கு காவல்துறை சார்பில் சிசிடிவி கேமரா பொருத்தும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்டம், குளித்தலை நகரில் முக்கிய பகுதியாக இருந்து வருவது சுங்ககேட் ரவுண்டானா. இந்த பகுதியில் தினந்தோறும் பெங்களூர், ஓசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், துறையூர், முசிறி ஆகிய மார்க்கத்திலிருந்தும் கோயம்புத்தூர், ஈரோடு, காங்கேயம், திருப்பூர், கரூர், மார்க்கத்தில் இருந்தும், கும்பகோணம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சி மார்க்கத்திலிருந்தும், மதுரை, திண்டுக்கல், பழனி, மணப்பாறை, கடவூர், தரகம்பட்டி, பஞ்சப்பட்டி மார்க்கத்தில் இருந்தும் தினந்தோறும் ஏராளமான சரக்கு வாகனங்கள், போக்குவரத்து வாகனங்கள், பள்ளி, கல்லூரி வாகனங்கள் சென்று வருகிறது.

மேலும் சுங்ககேட் அருகில் குளித்தலை -மணப்பாறை ரயில்வே கேட் பகுதி உள்ளது. குளித்தலை வழியாக தினந்தோறும் விரைவு ரயில்கள், பயணிகள் ரயில்கள் மற்றும் சரக்கு ரயில்கள் சென்று வருகிறது. ரயில் வரும் நேரங்களில் சாலைவழியாக (தண்வாளத்தை கடந்து) செல்லும் வாகனங்களை நிறுத்துவதற்காக ரயில்வே கேட் மூடப்படும்.

அப்போது ரயில்வே கேட்டை மூடுவதற்கு முன்பாக தண்டவாளத்தை கடந்து சென்று விடலாம் என்று பரபரப்பாக வரும் வாகனங்கள் ரயில்வே கேட் அடைக்கப்பட்டதும் ரயில் கடந்து செல்லும் வரை காத்திருக்கின்றன. இந்நிலையில் ரயில் சென்றவுடன் கேட் திறக்கப்பட்டதும் வாகனங்கள் தொடர்ந்து வருவதால் சுங்ககேட் ரவுண்டானா வரை போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

அதனால் குற்ற சம்பவங்கள் ஏதேனும் நடைபெற்றால் அதனை கண்காணிக்க போக்குவரத்து காவல்துறை மற்றும் காவல்துறை சார்பில் சிசிடி கேமரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதுபோன்று பொது மக்கள் கூடும் இடங்களில் ஒன்றான குளித்தலை சுங்க கேட் ரவுண்டான பகுதியில் சிசிடி கேமரா பொருத்துவது பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

இன்று பெரும்பாலான குற்ற சம்பவங்களை கண்டுபிடிக்க இது போன்ற சிசிடி கேமரா காவல்துறைக்கு பெரும் (ஒரு கருவியாக) உதவியாக இருந்து வருகிறது. அதனால் இதுபோன்று காவல்துறை நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது என பொதுமக்கள் கூறினர்.



குளித்தலை சுங்க கேட் ரவுண்டானா பகுதியில் காவல்துறை சார்பில் அமைக்கப்படும் சிசிடிவி கேமரா.

கரூர் மாவட்டத்தில்

# 5 இடங்களில் இன்று ‘உங்களுடன் ஸ்டாலின் முகாம்

**கலெக்டர் தகவல்**

**கரூர், அக்.9:** கரூர் மாவட்டத்தில் இன்று நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் தங்கவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

கரூர் கலெக்டர் தங்கவேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டம் கரூர் மாவட்டத்தில் கடந்த ஜூலை 15ம் தேதி அன்றுதுவங்கி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், கரூர் மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி பகுதிகளில் 7 முகாம்கள், நகராட்சி பகுதிகளில் 11 முகாம்கள், பேரூராட்சி பகுதிகளில் 3 முகாம்கள், வட்டார ஊராட்சிகளில் 28 முகாம்கள், என 49 முகாம்கள் செப்டம்பர் 19ம் தேதி முதல் அக்டோபர் 14ம் தேதி வரை நடைபெற உள்ளது. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். மேற்படி அரசுத் துறைகள் மூலம் நகர் பகுதிகளில் 13 துறைகளில் 43 சேவைகள், கிராமப்புறங்களில் 15 துறையில் 46 சேவைகள் மற்றும் குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை தொடர்பான கோரிக்கை மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இன்று (9.10.2025) வியாழக்கிழமை புகழூர் நகராட்சியில், வார்டு எண்.24 செக்குமேடு அம்மா மண்டபத்திலும், கரூர் மாநகராட்சியில் வார்டு எண்.41 ஜீவா நகர் பூங்கா தெற்கு காந்திகிராமத்திலும், கடவூர் வட்டாரம், கடவூர் ஊராட்சிக்கு கடவூர் சமுதாய கூடத்திலும், தாந்தோணி வட்டாரம் புத்தாம்பூர் ஊராட்சிக்கு சமத்துவபுரம் சமுதாய கூடத்திலும், குளித்தலை நகராட்சியில் வார்டு எண்.13,24-க்கு குளித்தலை காவேரி நகர் அண்ணா சமுதாய மண்டபத்திலும், உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

மேலும், இச்சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் தங்களது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் தங்களது கோரிக்கை தொடர்பாக மனு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் தங்கவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

லாலாபேட்டை பகுதியில்

# மழையால் செழித்து வளர்ந்துள்ள எள் செடிகள்

**லாலாபேட்டை அக். 9:** லாலாபேட்டை பகுதிகளில் மானாவரி பயிரான எள் செடிகள் நன்கு பூ பூத்து வளர்ந்துள்ளது.

கரூர் மாவட்டம் லாலாபேட்டை அருகே பஞ்சப்பட்டி, பாப்பாக்காப்பட்டி, போத்துராவுத்தன்பட்டி, குள்ளம்பட்டி, கட்டாரிப்பட்டி, வயலூர், வரகூர், வீரியம்பாளையம் பகுதிகளில் விவசாயிகள் எள் சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு நிலம் உழவு செய்யப்பட்டு எள் விதைகள் தூவப்பட்டது. கடந்த சில நாட்களாக லாலாபேட்டை சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக தற்போது எள் செடிகள் நன்கு வளர்ந்து பூ பூத்துள்ளது. இன்னும் 25 தினங்களுக்குள் எள் அறுவடை பணிகள் துவங்கும். இப்பகுதிகளில் சுமார் 500 ஏக்கருக்கு மேல் விவசாயிகள் எள் சாகுபடி செய்துள்ளனர்.

கரூர் மாநகராட்சி மண்டல பகுதியில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்

**மேயர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்**

**கரூர், அக்.9:** கரூர் மாநகராட்சி மண்டலம் பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு மேயர் கவிதா கணேசன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் திட்டத்தின் கீழ் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் கரூர் மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு-27 பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கரூர் காமராஜபுரம், சின்ன கொங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தாசில்தார் குமரேசன் தலைமை தாங்கினார். மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி கழக செயலாளர் ஜோதிபாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாமன்ற உறுப்பினர்கள் நிர்மலாதேவி சண்முகசுந்தரம், தேவி ரமேஷ்குமார், புவனேஸ்வரி, மாநகர பிரதிநிதி கார்த்திகேயன், வார்டு செயலாளர்கள் சாலை ரமேஷ், சண்முகசுந்தரம், ரமேஷ் குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முகாமில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதித்துறை, , சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை, வேளாண்மை -உழவர் நலத்துறை ,சிறப்பு திட்ட செயலாக்க துறை , (கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ), காவல் துறை,மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை, எரிசக்தி துறை ,கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ,மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை ,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, கால்நடை பராமரிப்பு , உள்ளிட்ட 13 துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இந்த முகாமில், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு மேயர் கவிதா கணேசன், நலத் திட்ட உதவிகள் வழங்கினார். அருகில், தாசில்தார் குமரேசன், பகுதி கழக பொறுப்பாளர் ஜோதிபாசு, மாவட்ட உறுப்பினர்கள் நிர்மலா தேவி, தேவி.

தேசிய தொழிலாளர் கொள்கையை வெளியிடகோரி

# ஏஐடியூசி மாவட்டக் குழு ஆர்ப்பாட்டம்

**கரூர், அக்.9:** தேசிய தொழிலாளர் கொள்கையை வெளியிடக்கோரி கரூரில் ஏஐடியுசி மாவட்டக்குழு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தேசிய தொழிலாளர் கொள்கையை வெளியிட வேண்டும் உள்பட கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியூசி கரூர் மாவட்டக் குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. தலைமை தபால் நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு ஏஐடியூசி கரூர் மாவட்டகுழு தலைவர் குப்புசாமி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வடிவேலன் கலந்து கொண்டு கோரிக்கை குறித்து பேசினார். நிர்வாகிகள் ரத்தினம், கலாராணி,, நாட்ராயன் உட்பட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு பேசினர்.

தேசிய தொழிலாளர் கொள்கையை வெளியிட வேண்டும் எனபன போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தொழிலாளர் கொள்கையை வெளியிடக்கோரி, தமிழக அரசு வலியுறுத்தி கரூரில் ஏஐடியுசி மாவட்டக்குழு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


**தமிழ்நாடு கிராம வங்கி**

மண்டல அலுவலகம்

3/168-1A, பாரதி நகர், மோகனூர் ரோடு, நாமக்கல் - 637 001.

போன் : 04286 - 231503, 231603, செல் : 83000 77303

**நகை ஏல அறிவிப்பு**

தமிழ்நாடு கிராம வங்கி (பல்லவன் கிராம வங்கி) கீழ்காணும் கரூர் மாவட்ட கிளைகளில் தங்க நகை ஈட்டு கடன் பெற்றவர்களுக்கு கடன் மற்றும் வட்டியினை செலுத்தி நகையினை மீட்க நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டது. கீழ்க்காணும் கடன்தாரர்கள் கடனை செலுத்தி நகையை மீட்க தவறியதால் வரும் 28.10.2025 செவ்வாய்கிழமை அன்று மதியம் 3.00 மணிக்கு அந்தந்த கிளை வளாகத்தில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலத்திற்கு பிறகும் கடனாளி செலுத்த வேண்டிய கடன் தொகை பாக்கி இருந்தால் சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும். கடன்தாரர் இறந்துவிட்டார் எனில் இந்த அறிவிப்பு வாரிசுதாரர்களுக்கு பொருந்தும். ஏலத்தை ரத்து செய்ய மற்றும் ஒத்தி வைப்பதற்கு கிளை மேலாளருக்கு அதிகாரம் உண்டு. மறு ஏலத்திற்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலம் பற்றிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் அறிய கிளை மேலாளரை தொடர்பு கொள்ளவும்.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | கடன் எண். | கடன் தேதி | கடன் தொகை | மொத்த எடை |
|---|---|---|---|---|---|
| | **புலியூர் கிளை செல் : 8300077071** | | | | |
| 1 | K.வேலுசாமி S/O காளியப்ப கவுண்டர், 45, சந்தானசாமி கோவில் தெரு, லிங்கத்தூர், உப்பிடமங்கலம், கரூர் - 639114 | 10219012266 | 26-04-2024 | 112000 | 32.200 |
| | **ராயனூர் கிளை செல் : 83000 77237** | | | | |
| 2 | பிரேம்குமார் A, S/O அரசப்பன், 17, தாந்தோணி கடைத்தெரு, திருமாநிலையூர், கரூர் | 10217935593 | 15-04-2024 | 110000 | 28.000 |

வட்டார மேலாளர் மற்றும் கிளை மேலாளர்கள்


புதிய பஸ் நிலையம் செயல்பாட்டுக்கு வந்ததால்

# கரூர் பழைய பேருந்து நிலையம் கூட்டமின்றி வெறிச்சோடியது



கரூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து நகர பேருந்துகள் மட்டும் இயக்கப்படுவதால் மக்கள் கூட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது.

**கரூர், அக்.9:** கரூர் திருமாநிலையூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் செயல்பாட்டுக்கு வந்ததால் எப்போதும் பரபரப்புடன் காணப்பட்ட பழைய பேருந்து நிலையம் தற்போது வெறிச்சோடி காணப்படுகிறது.

கரூர் மாநகரின் மத்திய பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக கரூர் பேருந்து நிலையம் செயல்பட்டு வந்தது. அதிகளவு பேருந்துகள் வந்து சென்றதால், அடிக்கடி போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வந்தன. இதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியை சமாளிக்கும் வகையில் புதிய பேருந்து நிலையம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

இந்நிலையில், கடந்த 2022ம் ஆண்டு கரூர் திருமாநிலையூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது.

தற்போது அனைத்து பணிகளும் முடிவடைந்து கடந்த மாதம் புதிய பேருந்து நிலையம் திறப்பு விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அக்டோபர் 6ம் தேதி காலை முதல் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறநகர் பேருந்து சேவை துவங்கியுள்ளது. இங்கிருந்து ஈரோடு, திருப்பூர், கோவை மார்க்கமாகவும், திண்டுக்கல், மதுரை மார்க்கவும், நாமக்கல், சேலம் மார்க்கமாகவும், அதேபோல் திருச்சி மார்க்கமாக செல்பவர்கள் அந்தந்த வழித்தட பேருந்துகளில் ஏறிச் செல்ல வேண்டும்.

இதன் காரணமாக கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இடநெருக்கடியுடன் பரபரப்புடன் செயல்பட்டு வந்த கரூர் பழைய பேருந்து நிலைய வளாகம் தற்போது வெறிச்சோடி காணப்படுகிறது. தற்போதைய நகரப் பேரூந்து சேவை மட்டுமே இங்கிருந்து செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


**க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**
(முன்னர் பூனாவால்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018

**மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை**

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.**

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்)** அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 மற்றும் 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 09.11.2025 தேதியன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

| வ. எண். | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B) | சுவாதீன தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை (நி.வி.-ல் 10%) (F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலத் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடன் எண்: HF0128H21100141 ஜெயசீலன் கணிகைராஜ், கிரேசி ஜெயசீலன் | கோரிக்கை அறிவிப்பு தேதி: 09.07.2025 மொத்த நிலுவைத் தொகை: 09.07.2025 தேதியின்படி ரூ. 11,46,433/- (ரூபாய் பதினொரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூற்று முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15.85% வட்டியுடன் கூடிய தொகை. | கையக | புதுக்கோட்டை மாவட்டம் & பதிவு மாவட்டம், அன்னவாசல் துணை பதிவு அலுவலகம், இலுப்பூர் தாலுகா, பெருமாநாடு கிராமம், சர்வே எண்.72/2 இல் உள்ள 1960 சதுர அடி சொத்து பின்வரும் நான்கு எல்லைகளைக் கொண்டது. எல்லைகள்: மேற்கு: சாலை கிழக்கு: அன்பரசி & ரெங்கசாமி சொத்து, வடக்கு: கால்வாய், தெற்கு: நஞ்சை நிலம். இந்த நான்கு எல்லைகளுக்குள் அளவீடு: கிழக்கு மேற்கு இருபுறமும் 40 அடி, வடக்கு தெற்கு இருபுறமும் 49 அடி. மொத்தம் 1960 சதுர அடி சொத்து மற்றும் அங்கு கட்டப்படவுள்ள கட்டிடம் மின்வாரிய சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத்தொகை அதனுடன் அனைத்து பாதை மற்றும் பயன்பாட்டு உரிமைகளுடன் கூடிய சொத்து. | Rs. 19,90,450/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து தொன்னூறாயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) | Rs. 1,99,045/- (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து நாற்பத்தைந்து மட்டும்) | 29/10/2025 Before 5 PM | 10,000/- | 22/10/2025 (11AM – 4PM) | 09/11/2025 (11 AM- 2PM) | எதுவுமில்லை |

**ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.**

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்-411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 29.10.2025 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018 கைபேசி எண். +91 9597907666,** மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

**கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.**

**உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.**

**நாள்: 09.10.2025, இடம்: புதுக்கோட்டை** — **ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிட்., என்றறியப்பட்டது)**